அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) சிறுவர்களுக்கு எதிரான அனைத்துவிதமான துன்புறுத்தல் செயல்களையும் நிறுத்துதல் ;

(ஆ) துன்புறுத்தல்களுக்கு இலக்கானவர்களுக்கு, அகதிகளுக்கு மற்றும் இத்தகைய உதவிகள் அவசியமான சிறுவர், முதியோர், ஊனமுற்றோர் அத்துடன் வறிய மக்களுக்கு சகலவிதமான மனிதாபிமான உதவிகளையும் பகிர்ந்தளித்தல் ;

(இ) பங்கேற்பு அபிவிருத்தி மூலமாக விவசாய, மீன்பிடி, சிறுதொழில் முயற்சி மற்றும் கிராமியக் கைத்தொழில் துறையின் செயற்பாடுகளை பேணிவருவதன் மூலமாக கிராமிய சமுதாயத்தின் அபிவிருத்தியை ஏற்படுத்துதல்;

(ஈ) வருமான ஈட்டல் செயற்பாடுகள், சுயதொழில் வாய்ப்புக்கள் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த அவசியமான அனைத்துவிதமான முயற்சிகளையும் மேற்கொள்வதன் மூலமாக கிராமிய வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ;

(உ) யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சமூகத்தில் பின்தங்கிய குழுக்களாக சுகாதார, கல்வி, ஆண், பெண், சமூக நிலை, சிறுவர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பிற்காக அர்ப்பணித்தல், அவர்களின் கொள்திறன் விருத்திக்காக அவசியமான நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கி சமூக அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல்;

